# சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள்

ந சுப்புரெட்டியார் அவர்களின் நூற்றாண்டுவிழா நினைவு

## தேசியக் கருத்தரங்கம்

பதிப்பாசிரியர்கள்


முனைவர் செ.கிரிஜா
முனைவர் ஜெ. சந்திரிகா
முனைவர் சௌ.பா.சாலாவாணிஸ்ரீ
முனைவர் கி. காவேரி
முனைவர் இர. பிருந்தாவதி
உதவிப் பேராசிரியர் ப. வனிதா



ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி
AC-48, 6வது பிரதானசாலை,
அண்ணாநகர்,
சென்னை 600 040.

## நூல் விவரக் குறிப்பு

தலைப்பு: *சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள்*

பொருள்: ஆய்வுக் கட்டுரைகள்

மொழி: தமிழ்

பதிப்பாசிரியர்கள்:

முனைவர் செ.கிரிஜா
முனைவர் ஜெ. சந்திரிகா
முனைவர் செ.பா.சாலாவாணிஸ்ரீ
முனைவர் கி. காவேரி
முனைவர் இர. பிருந்தாவதி
உதவிப் பேராசிரியர் ப. வனிதா

பதிப்பு: முதற்பதிப்பு 11.03.2016

நூல் அளவு: டெம்மி

எழுத்துஅளவு: 12

பக்கங்கள்: 418

விலை:

கணினி அச்சு: Department of Tamil, Sri Krishnaswamy College of Women

அச்சாக்கம்: DJ Prints, Chennai - 95. Cell : 8903478236

**ISBN: 978-81-932327-3-6**



*இந்நூற் கட்டுரைகளின் கருத்துகளுக்குக் கட்டுரையாளரே பொறுப்பு.*

| | | |
|---|---|---|
| | முனைவர் வே. நிர்மலா செல்வி | |
| 067 | தமிழ்விடு தூதில் வாழ்வியல் கூறுகள்<br>முனைவர் அ. இலம்பா | 250 |
| 068 | கலம்பகத்தில் வாழ்வியல் பதிவுகள்<br>ஜெ. சந்திரசேகரன் | 253 |
| 069 | கலிங்கத்துப் பரணி – ஒரு வாழ்வியல் கருவூலம்<br>முனைவர் க. லதா | 256 |
| 070 | நந்திக் கலம்பகத்தில் பெண்களின் காதல்<br>முனைவர் ந. அன்புச்செல்வி | 259 |
| 071 | முக்கூடற் பள்ளு காட்டும் வேளாண் செய்திகள்<br>பேரா.எம்.சாந்தி | 263 |
| 072 | சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள்<br>தா.கார்த்திகா | 267 |
| 073 | குற்றாலக் குறவஞ்சியில் உயிரினங்கள்<br>ரி. ஜெயசீலன் | 269 |
| 074 | சிற்றிலக்கியம் - பிரபந்தம் ஓர் ஆய்வு<br>சி.இராஜாராம் | 272 |
| 075 | முக்கூடற்பள்ளு காட்டும் உழவர்களின் வாழ்வியல் பதிவுகள்<br>சோ. இலக்கியா | 276 |
| 076 | நந்திக்கலம்பகம் அவைப்பாடல் - ஓர் கண்ணோட்டம்<br>சி.நந்தினி | 281 |
| 077 | நாரை விடு தூதுவழி - அறியலாகும் புலவர்தம் வாழ்வுநிலை<br>முனைவர் வாணி அறிவாளன் | 284 |
| 078 | குறவஞ்சியில் வாழ்வியல் சிந்தனைகள்<br>க.ரேவதி | 287 |
| 079 | நந்திக் கலம்பகம் கூறும் மன்னனின் சிறப்புகள்<br>முனைவர் பொ.ஜெயப்பிரகாசம் | 290 |
| 080 | சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்<br>மு.க.அனிதா | 292 |
| 081 | சிற்றிலக்கியங்களில் வாழ்வியல் பதிவுகள்<br>கோ.புவனேஸ்வரி | 297 |
| 082 | திருநணாச் சிலேடை வெண்பா உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்<br>முனைவர். கே.இரா. கமலாமுருகன் | 299 |
| 083 | திரிசிரபுரம் மீனாட்சி அம்மாளின் கும்மிப்பாட்டு<br>தாயம்மாள் அறவாணன் | 304 |
| 084 | தமிழ்விடுதூதும் தமிழும்<br>முனைவர் பா. முத்துசாமி | 308 |
| 085 | திருவேங்கட சதகத்தில் வாழ்வியல் அறங்கள்<br>முனைவர் த. தனஞ்செயன் | 313 |
| 086 | புதினவதியார் பிரபந்தங்களில் வாழ்வியல் பதிவுகள்<br>முனைவர் ஜா.திரிபுர சூடாமணி | 318 |
| 087 | திருக்குற்றாலக் குறவஞ்சி காட்டும் வாழ்வியல<br>முனைவர். அ.பூங்கொடி | 322 |
| 088 | உவமைகள் உணர்த்தும் மெய்யியல் - நெஞ்சு விடு தூது<br>பா.குப்புசாமி | 325 |
| | | |
| 089 | முக்கூடற் பள்ளில் உழவு முறை வெளிப்பாடு<br>சி. வத்சலா லட்சுமி நாராயணன் | 328 |
| 090 | சிற்றிலக்கியத்தில் நாடகக் கூறுகள்<br>ஏ. மேனகா | 331 |

# குறவஞ்சியில் வாழ்வியல் சிந்தனைகள்

**க.ரேவதி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
பாத்திமா கல்லூரி
மதுரை.

**முன்னுரை:**

இலக்கியத்தை காலம் காட்டும் கண்ணாடி என்பர். இலக்கியத்தில் படைப்பாளனின் வாழ்வியல் அனுபவங்களும் படைப்பு எழுந்த காலத்தில் நிலவிய சமூகச் சிந்தனைகளும் இடம்பெறும். திரிகூடராசப்பக் கவிராயரால் இயற்றப்பட்ட திருக்குற்றாலக் குறவஞ்சியில் இடம்பெறும் குறவர்களின் வாழ்வியல் சிந்தனைகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**குறவஞ்சி இலக்கியம்:**

ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் காலத்திலேயே தமிழகத்தில் நிலம் பகுக்கப்பட்டிருந்தது. அந்தந்த வாழிடத்திற்கு ஏற்பவே அவர்களது தொழிலும் வாழ்வும் அமைந்திருந்தது. குறவஞ்சி இலக்கியத்தின் பிற்பகுதி குறவர்களின் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுவதாகவே அமைந்துள்ளது. உலாவந்த தலைவனைக் கண்ட தலைவி அவன்மீது மையல் கொண்டு வருந்தும் பொழுது மலைவளம் கூறியபடியே முக்காலத்தையும் உணர்த்தவல்ல ஆற்றலுடைய குறத்தி அறிமுகமாகின்றாள்.

***வஞ்சி வந்தனளே மலைக்குற வஞ்சி வந்தனளே***

என அறிமுகமாகும் குறவஞ்சியின் அழகுடன் அவளது குறிசொல்லும் ஆற்றலும் இணைந்தே கூறப்பட்டுள்ளதை,

***வல்லி அவளினும் மெல்லி இவள் என
ஒல்லி வடகன டில்லி வரைபுகழ்
புல்லி வருகுறி சொல்லி***

என்ற வரிகளின் வழி அறியலாம். குறத்தி தான் வசிக்கும் மலையின் வளத்தினைக் கூறும் பொழுது அவர்களின் உணவுமுறை, தொழில்,பண்பாடு உள்ளிட்ட அனைத்தினையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

**குறி சொல்லத் தொடங்கும் முன் செய்ய வேண்டியவை :**

குறி சொல்லத் தொடங்கும்முன் குறத்தி ஒரு சில செயல்களைச் செய்ய வேண்டுகிறாள். தரைமெழுகிக் கோலமிடுதல், கணபதியின் உருவைப் பிடித்து வைத்தல், நிறைகுடம் எடுத்து வைத்தல், அருகம் புல்லும் தண்ணீரும் பிடித்து வைத்தல், விளக்கு வைத்தல, தேங்காய் உடைத்து மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளைப் பரப்பி வைத்து வடை, அப்பம், அவல், கடலை முதலியவற்றுடன் சர்க்கரை, எள்ளுருண்டை, பொரி இவற்றையும் கொணர்ந்து வைத்துக் குலதெய்வத்தை மனத்துள் எண்ணிக் குறி கூறத் தொடங்குகிறாள்.

**நிமித்தம் பார்த்தல்:**

குறி கூறத் தொடங்கும்முன் நன்னிமித்தம் பார்த்துக் குறி சொல்லும் வழக்கம் இருந்துள்ளது. குறத்தி

***விம்மு முலைக்கன்னி சொன்ன பேச்சு நன்றும்மே நேரே
மேல் புறத்தில் ஆந்தைஇட்ட வீச்சுநன் றும்மே***

என்கிறாள். மேலும் தும்மல், காகம் இடப்பக்கம் பறந்து செல்லுதல் இவை யாவும் நன்னிமித்தங்களாகச் சொல்லப்பட்டுள்ளது. குறவர்களிடம் நிமித்தம் பார்க்கும் வழக்கம் இருந்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.